தமிழ்நாடு

# “142 ஏழை மாணவர்களை மருத்துவர்களாக்கி இருக்கிறோம்” – `முகவரி’ ரமேஷ் பேட்டி

OPEN HORIZON · PUBLISHED: MAR 15, 2021 | 14:15:00 IST · 1 MINUTE READ




ஊர் பேர் தெரியாத எத்தனையோ ஏழை எளிய ஆதரவற்ற மாணவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு முகமாக இருந்துவருகிறது முகவரி பவுண்டேஷன். கடந்த 19 ஆண்டுகளாகக் கல்வியில் சிறந்த மாணவர்களின் படிப்புக்கான முழு கட்டணத்தையும் செலுத்திவருபவர் அதன் நிறுவனர் முகவரி ரமேஷ்.

33
Share

**அன்று சிறு துளியாகத் தொடங்கிய உதவிகள் பெரும்நதியாக வளர்ந்திருக்கிறது. இன்று தமிழகம் முழுவதும் முகவரி பவுண்டேஷன் மூலம் பயனடைந்தவர்கள் 520 பேர். அதில் 142 பேர் எம்பிபிஎஸ். மருத்துவம் படித்தவர்களில் 20 பேர் அரசுப் பணிகளில் உள்ளனர். அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டும் 70 பேர் பொறியியல் படித்துவருகிறார்கள்.**








ஓபன் ஹாரிசானிடம் பேசிய ரமேஷ், “என் சொந்த கிராமம் ஆத்தூர் அருகிலுள்ள ஆரத்தி அக்ரஹாரம் என்ற சின்ன கிராமம். எளிய விவசாயக் குடும்பம். நாமக்கல் அரசுக் கல்லூரியில் பிஎஸ்சி கணிதம் படித்துவிட்டு சிஏ படிக்கச் சென்றேன். நன்றாகப் படிக்கக்கூடிய மாணவன் நான்.

**அக்காவின் இதயப் பிரச்னை :**

33
Share

**என் அக்காவுக்கு இதயப் பிரச்னை இருந்தது. சம்பாதிக்கிற காசு எல்லாம் மருந்து மாத்திரைகளுக்காகவே செலவானது. அப்பா, அம்மா சம்பாதிக்கிற பணம் முழுவதையும் வைத்து மாத்திரை வாங்குவார்கள்.**



நானும் என் தம்பியும் வறுமையில் இருப்போம். எங்களுக்குச் செலவழிக்கக் காசிருக்காது. நல்ல உடையும் கிடைக்காது. படிப்புக்கும் செலவழிக்கமாட்டார்கள்.சென்னை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தபோது அக்கா இறந்துவிட்டார். எங்களால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

நல்ல மருத்துவர்கள் இருந்தால், அக்காவைக் காப்பாற்றி இருக்கலாமே என்ற ஓர் எண்ணம் ஆழமாக எழுந்தது" என்று தன்முன் கதையை நினைவுகூர்ந்தார்.

**மருத்துவப் படிப்பில் முதல் மாணவி :**

33
Share

**பின்னர் சிஏ படிக்கச் சென்றார் ரமேஷ். அப்போது ஊரில் ஒரு மாணவி ப்ளஸ் டூ தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து மருத்துவம் படிக்கும் கனவுடன் இருந்தார். படிப்பில் சிறந்த இந்தப் பெண்ணை மருத்துவராக்கலாமே என்று நினைத்தார்.**



அன்றுதான் பின்தங்கிய மாணவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றும் தன் கனவின் முதல் புள்ளியை வைத்தார் ரமேஷ், “ப்ளஸ் டூ முடித்தும் முதல் ஆண்டில் அந்த மாணவியால் எம்பிபிஎஸ் சேரமுடியவில்லை. இரண்டாம் ஆண்டில் நுழைவுத்தேர்வு எழுதி மாநிலத்தில் மூன்றாம் இடம் கிடைத்தது. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். உடனே கல்விக் கட்டணம் கட்ட பணம் கிடைக்கவில்லை.

**ஏஆர் முருகதாஸ் செய்த உதவி :**

33
Share

**இருந்தது. சென்னைக்கு வந்து பலரையும் சந்தித்துப் பேசி உதவிகள் கேட்டேன். ரமணா படம் வந்திருந்த நேரம்.**




இயக்குநர் முருகதாஸ் அண்ணாவைப் போய்ப் பார்த்தேன். அந்த மாணவியின் ஐந்தாண்டு படிப்புச் செலவையும் அக்கறையுடன் ஏற்றுக்கொண்டார். எங்கள் ஊரில் சின்ன மாற்றம் வரத் தொடங்கியது. அதிலிருந்து வசதி இல்லை என்றாலும் படிக்கமுடியும் என்ற நம்பிக்கை பிறந்தது.

பிறகு பலரும் உதவி கேட்டு என்னைத் தொடர்புகொண்டார்கள். எனக்கும் உதவிகள் செய்வதில் ஆர்வம் இருந்தது. சிஏ படிக்கும் எண்ணத்தையும் கைவிட்டேன். சென்னையில் ஒவ்வொருவராகச் சந்தித்துப் பேசினேன். நேரம் கிடைத்தபோது எங்கெங்கேயோ யார் யாரையோ பார்த்தேன். பல நாள் போராட்டத்திற்குப் பிறகு சிறு வெளிச்சம் தெரியத் தொடங்கியது.

**மாணவர்களுக்குத் தங்குமிடம் :**

33
Share

சைதை துரைசாமி . அது எங்களுக்கு மிகப்பெரும் ஊக்கமாக அமைந்தது. சென்னையில் தங்குவதற்கும் சாப்பாட்டுக்கும் இடம் கிடைத்ததால், உதவிகள் கேட்டு பெரிய மனிதர்களைச் சந்திப்பதற்குப் பேருதவியாக இருந்தது.



கடந்த 2002லிருந்தே கல்வி உதவிகளைச் செய்யத் தொடங்கிவிட்டோம். 2006 அக்டோபர் 15 ஆம் தேதிதான் முகவரி என்று பெயரிட்டோம். பின்னர் ஆடிட்டர் அலுவலக வேலையை விட்டு விலகி, என் இயல்புக்கு முகவரி பணிதான் சரியாக இருக்கும் என்று முழுமையாக ஈடுபட்டேன்" என்கிறார்.

ரமேஷுக்கு வயது 42. திருமணம் செய்துகொள்ளவில்லை. கல்வி உதவிகளில் வாழ்க்கை கரைந்துகொண்டிருக்கிறது. பெரிய பின்னணி இல்லாமல் தொடங்கிய பணி. ஏழை எளிய மாணவர்களின் கல்வி உதவிக்காக

33
Share

உயரம் இது. பலரும் காட்டிய கருணையால் கிடைத்த வரம்.




தமிழகத்தில் உள்ள 27 மருத்துவக் கல்லூரிகளிலும் முகவரி அறக்கட்டளை மாணவர்கள் படித்துவருகிறார்கள். எதிர்காலத்தில் முகவரி சார்பில் ஒரு பள்ளியை உருவாக்கும் முயற்சியில் இருக்கிறார் ரமேஷ். ஏழைக் குழந்தைகளும் வசதியானவர்களும் சமநிலையில் படிப்பது மாதிரியான ஒரு புதுமையான பள்ளிக்கூடம்.

**முழு கல்விக் கட்டணம் :**

> **ஒரு மாணவருக்குத் தேவையான கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம், பாடநூல் கட்டணம் என 100 சதவிகிதம் அனைத்துக் கட்டணங்களையும் செலுத்திவிடுகிறார்கள்.**

33
Share



எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தாலும் உண்மையாக உதவி தேவைப்படும் மாணவர்களை மட்டுமே தேர்வு செய்கிறார்கள்.

**உதவிய உள்ளங்கள் :**

> எங்களது முகவரி பவுண்டேஷன் உதவியால் படித்தவர்களில் ஐபிஎஸ், ஐஆர்எஸ், டிஎஸ்பி, டெபுடி கலெக்டர், உதவிப் பேராசிரியர், தாசில்தார், ஆர்ஐ மற்றும் வங்கி உள்ளிட்ட உயர் பணிகளில் உள்ளனர்.

33
Share








நான் உதவியவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அவர்களது உதவியால்தான் இன்று பல மாணவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்குச் சென்றுள்ளார்கள்.

சைதை துரைசாமி, இயக்குநர் ஏஆர். முருகதாஸ், கனரா வங்கி முன்னாள் இயக்குநர் மனோகரன், நந்தகுமார் ஐஆர்எஸ், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் கருணாமூர்த்தி, முன்னாள் டிஜிபி டி.கே. ராசேந்திரன், மருத்துவப் பேராசிரியர் டாக்டர் எஸ். சிவகுமாரி உள்ளிட்ட பலரும் உதவிக்கொண்டே இருக்கிறார்கள். நன்றியுணர்வுதான் என் வாழ்க்கை” என்று நன்றியுடன் முடித்தார் ரமேஷ்.

-சுந்தரபுத்தன்

A R Murugadoss | Director | Inspiration | Mugavari Ramesh | Tamil Nadu

33
Share